# அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் உலகளாவிய தலைவர்
## ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்)
## அவர்கள் இலண்டனிலுள்ள பைத்துல் ஃபுதூஹ் பள்ளிவாசலில்
## 16.01.2009 அன்று ஆற்றிய ஜுமுஆ பேருரை

**தஸஹ்ஹுத் தஅவ்வுது மற்றும் சூரா ஃபாத்திஹா ஓதிய பிறகு ஹுஸூர் அவர்கள் இவ்வாறு கூறினார்கள்:**

ஒரு மூஃமினுக்கு இறைவனது பண்புகளைப் பற்றி சிறிதளவாவது அறிவு இருக்கும் எனில் அவர் இறைவனது போதுமானவன் என்ற பண்பை தெரிந்திருப்பார். ஒருவருக்கு அது பற்றி தெரியாவிட்டாலும் கூட ஒரு முஸ்லிம் ஏதாவது ஒரு வழியில் அல்லாஹ்வுடைய போதுமானவன் என்ற பண்பை நினைவு கூறவே செய்கிறார்.

தமது போதுமென்ற எண்ணத்தை, தன்னிறைவை வெளிப்படுத்துவதற்கு அல்லாஹ் போதுமானவன் என்று சிலர் கூறக் கேட்டிருக்கிறோம்.

ஆனால், உண்மையான மூஃமினுக்கு இப்பண்பைப் பற்றிய சரியான அறிவு இருக்குமானால், அல்லாஹ்வுடைய எந்த பண்பைப் பற்றி நினைவு கூர்வதாயினும் மிகவும் ஆழமான முறையில் புரிந்து நினைவு கூறுவார்.

அல்லாஹ்வுடைய **காஃபீ** (போதுமானவன்) என்ற பண்பைப் பற்றி கூறினேன். இதனை அல்லாஹ் திருக்குர்ஆனில் பல்வேறு வசனங்களில் விளக்கியுள்ளான். பல்வேறு அத்தியாயங்களின் பல்வேறு கருத்துக்களின்கீழ் கூறியுள்ளான். அகராதியிலும் இதற்கு பல்வேறு பொருள்கள் எழுதப்பட்டுள்ளன. அதன் பரந்த பொருள் ஒவ்வொருவரின் அறிவிலும் படுவதற்காக சிலவற்றைக் கூறுவேன்.

**கஃபா** என்றால் ஒன்றை போதுமானதாக்குதல் – ஒரு பொருளைக் கொண்டு தன்னிறைவு பெறுதல், ஆறுதல் அடைதல். அல்லாஹ்வுடைய இருப்பை விட மனிதனுக்க ஆறுதல் தரக்கூடியது வேறு என்ன இருக்க முடியும்? அவனைத் தவிர வேறு யாருடைய பெயரை மனிதன் எப்போதும் சார்ந்து நிற்க இயலும்?

ஒரு ஆங்கில – அரபி அகராதி ஒன்றைத் தேர்ந்தெடுத்துள்ளேன். ஒரு சொல்லிற்கு அது பெரும்பாலான பொருட்களைத் திரட்டித் தருகிறது.

**கஃபானி ஃபலானுல் அல் அம்ரா.** ஒரு குறிப்பிட்ட வி–யத்தில் நான் இன்ன மனிதரை போதுமானவர் என்று கருதினேன். அதாவது நல்லவற்றை நான் அவரிடமிருந்து பெற்றேன். தீய விஷயம் எனில் அதிலிருந்து அவர் மூலமாக நான் தப்பினேன். இங்கும் நாம் சிலரைக் கொண்டு இப்பணிகளை செய்ய வைத்து விடுகிறோம். ஆனால் உண்மையில் அது இறைவனின் பணியாகும். அவனே நமக்கு நன்மை எது என்பதையும், தீமை எது என்பதையும் புரிய வைக்கிறான்; நமக்கு அடையாளமிட்டுக் காட்டியுள்ளான்.

பிறகு **கஃபா மின்** என்பதன் பொருள் – ஒன்றின் தீமையை அகற்றி காப்பாற்றி பாதுகாப்பாக வைத்தல் என்பதாகும். **கஃபா வு–ர்ரா** என்று கூறினால் ஒன்றின் தீமையை அதிலிருந்து அகற்றி அதன் தற்காப்பு செய்தான். அதனை விடுதலை பெறச் செய்தான். இப்பொருள்களின்படி மனிதன் மற்றும் இறைவன் இருவருக்கும் இச்சொல் பயன்படுகிறது. லிஸானுல் அரபியில் ஒரு ஹதீஸை சான்று காட்டி இதன் பொருள் விளக்கப்பட்டுள்ளது.

இரவில் சூரா பக்கராவின் கடைசி இரு வசனங்களை ஓதுவது அவருக்கு போதுமானது. அதாவது அவர் இரவை கழிப்பதற்கு அவ்விரு வசனங்கள் போதுமானது.

சிலரின் பொருளின்படி இந்த இரு வசனங்களும் இரவில் ஏற்படும் தீங்குகளுக்கு எதிரில் போதுமானவையாக இருக்கின்றன. இறைவனது படைப்பினங்களின் தீங்கிலிருந்து பாதுகாக்கிறது. இதனை ஆய்வு செய்யும்போது இதில் பல விஷயங்கள் தெரிய வருகின்றன.

இதில் துஆக்கள் உள்ளன. தீமையிலிருந்து தப்புவதற்கான வழிகள் உள்ளன. ஈமானை உறுதிப்படுத்தும் வழியும் உள்ளது. இந்த ஹதீஸிலிருந்து சில கேள்விகளும் எழலாம். இந்த வசனத்தை ஒதி விட்டாலேபோதும் என்று வருகிறது. அது எப்படி? நான் இந்த வசனத்தின் பொருளிலிருந்து அதனை சிறிது விளக்குகிறேன்.

சூரா பக்கராவின் கடைசி இரு வசனங்களுள் முதல் வசனம் இதுவாகும்.

*இத்தூதர் தம்முடைய இறைவனிடமிருந்து தனக்கு இறக்கப்பட்டதில் நம்பிக்கை கொண்டுள்ளார். (ஏனைய) நம்பிக்கையாளர்களும் (நம்பிக்கை கொண்டுள்ளனர்). இவர்களெல்லாரும் அல்லாஹ், அவனுடைய வானவர்கள், அவனது வேதங்கள் மற்றும் அவனுடைய தூதர்கள் மீதும் நம்பிக்கை கொண்டு, நாங்கள் அவனுடைய தூதர்களுள் எவர்களுக்கிடையிலும் (எந்த) வேற்றுமை(யும்) பாராட்டுவதில்லை (எனக் கூறுவர்). நாங்கள் (அல்லாஹ்வின் கட்டளையை) செவியேற்றோம்; கட்டுப்பட்டோம். எங்கள் இறைவா! நாங்கள் உன் மன்னிப்பைக் கோருகின்றோம். உன்னிடமே (நாங்கள்) திரும்பி வர வேண்டியதும் இருக்கின்றது என்றும் இவர்கள் கூறினார்கள்.*

*அல்லாஹ் எவனுக்கும், அவனுடைய தகுதிக்கு அப்பாற்பட்ட பொறுப்பைச் சுமத்துவதில்லை. அவன் சம்பாதித்த (நன்மையான)து அவனுக்கே. அவன் சம்பாதித்த (தீமையான)து அவனுக்கே. எங்கள் இறைவா! நாங்கள் மறந்து விட்டாலோ, தவறிழைத்தாலோ நீ எங்களை தண்டிக்காதிருப்பாயாக. எங்கள் இறைவா! எங்களுக்கு முன்னுள்ளவர்கள் மீது நீ பாரத்தைச் சுமத்தியது போன்று எங்கள் மீதும் நீ அதனை சுமத்தாதிருப்பாயாக. எங்கள் இறைவா! எங்களால் (சுமக்க) இயலாத (பாரத்)தை எங்கள் மீது சுமத்தாதிருப்பாயாக. எங்கள் (குற்றங்களை) மன்னிப்பாயாக; எங்களைப் பொறுத்தருள்வாயாக; எங்கள் மீது கருணை காட்டுவாயாக; நீயே எங்கள் எஜமானன்; ஆகவே நிராகரிக்கும் கூட்டத்தினர்க்கு எதிராக நீ எங்களுக்கு உதவி புரிவாயாக.*

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் இந்த வசனங்களை இரவில் ஓதுவதை போதுமானதாக்கினார்கள் என்று மொழிபெயர்ப்பை படிக்கும்போது தெளிவாகிறது.

முதல் வசனத்தில் நஃப்ஸை தூய்மையாக்குவதன் பக்கம் கவனமூட்டியவாறு, அல்லாஹ்வின் மீதும், அவனது மலக்குகளின் மீதும், அவனது வேதங்கள் மீதும், அவனது ரஸூல்மார்கள் மீதும் ஈமான் கொள்ளுமாறு கூறப்பட்டது. ஏனெனில் ஈமானில் முழுமை அடைவதற்கு இவை அனைத்தின் மீதும் ஈமான் கொள்வது அவசியம்.

இந்த ஈமான் ஒரு கொள்கை அளவில் மட்டுமல்ல; செயல்ரீதியாகவும் அவசியமாகும். அல்லாஹ்வின் மீது கொண்ட ஈமான், தக்வாவில் முன்னேறும்போதுதான் உறுதியாகும்.

அல்லாஹ்வின் மலக்குகளின் கடமைகள் முடிந்து விடவில்லை. இன்றும் கூட அவர்கள் மீது கொடுக்கப்பட்ட கடமைகளை அவர்கள் நிறைவேற்றிக் கொண்டிருக்கின்றனர் என்பதனை அவனது மலக்குகளின் மீதும் ஈமான் கொள்ள வேண்டும் என்பதிலிருந்து விளங்குகிறது. இதேபோன்று முந்தைய நபிமார்களுக்கு இறைவன் இறக்கியவற்றை ஈமான் கொள்ள வேண்டும். ஆனால், அந்த போதனைகளை மக்கள் புரட்டி விட்டார்கள். எனினும் அவற்றிலுள்ள சிறந்த போதனைகளை இறைவன் திருக்குர்ஆன் மூலம் பாதுகாத்து அந்த முந்தைய வேதங்களையும் உண்மை என்று கூறியுள்ளான். எனவே முந்தைய வேதங்களுக்கு நேர்ந்த நிலையைக் கருத்தில் கொண்டு திருக்குர்ஆனை மாற்றம், திருத்தங்களிலிருந்து தூய்மையாக பாதுகாத்து வைப்பேன் என்று பிரகடனம் செய்தான்.

பிறகு எல்லா நபிமார்கள் மீதும் ஈமான் கொள்ளுமாறு கவனமூட்டியுள்ளான். இது இஸ்லாத்தின் சிறப்பம்சமாகும். எல்லா ரஸூல்மார்களையும் ஈமான் கொள்ளுமாறு அது கூறுகிறது. இங்கு கடந்த காலத்தில் வந்த எல்லா ரஸூல்மார்களையும் ஈமான் கொள்ளுங்கள் என்று கூறப்படவில்லை. மாறாக, எல்லா ரஸூல்மார்களையும் ஈமான் கொள்ளுங்கள் என்று கூறப்பட்டுள்ளது.

திருக்குர்ஆனும், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களும் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் வருகையைப் பற்றி கூறி வழியைத் திறந்து வைத்துள்ளார்கள். அந்த வழியைத் திறந்து வைத்து வரக்கூடிய ரஸூல்மார்களை ஒப்புக் கொண்டு ஈமான் கொள்ள வேண்டும் என்று கட்டளையும் இட்டுள்ளார்கள். இப்போது பெயர்தாங்கி உலமாக்களின் துரதிருட்ஷ்டம்! அல்லாஹ்வின் சட்டத்திற்கு ஏற்ப வரக்கூடிய நபிமார்களின் வருகையின் நோக்கத்தை விட்டுவிட்டு அல்லாஹ்வின் சட்டத்திற்கு மாற்றமாக ஒரு மஸீஹின் வருகையை எதிர்பார்த்துக் கொண்டிருக்கின்றனர்.

திருக்குர்ஆன் மீது ஈமான் கொண்டிருப்பதாக கூறிக்கொண்டு திருக்குர்ஆன் கூறுவதை மறுக்கின்றனர். ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்கள் மரணமடைந்து விட்டதாக திருக்குர்ஆன் கூறுகிறது. உலகில் வந்த எந்த மனிதரும் உயிருடன் வானத்திற்குச் செல்வதில்லை. மாறாக, அவரது உயிரே செல்கிறது. இவ்வுலகில் வந்த ஒவ்வொரு பொருளும் அழியக்கூடியதே. பிறகு இம்மக்கள் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களை மறுத்து விட்டு ஈமானுடைய எல்லா இலக்கணங்களையும் மறுக்கின்றனர். ஓர் எல்லைக்குட்பட்ட ஈமானைக் கொண்ட முஸ்லிம்களையும் தமது பின்னால் சேர்த்துக் கொண்டு இந்த ஆலிம்கள் அவர்களின் ஈமானையும் நாசமாக்குகின்றனர்.

இந்த உண்மையை இம்மக்கள் உணர வேண்டும். இவர்கள் திருக்குர்ஆனில் படிக்கின்றனர். ஹதீஸில் படிக்கின்றனர். தெளிவாக இதனை சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. எவ்வாறு நபிமார்கள் வந்தனரோ அதேபோன்று ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் வந்தார்கள். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் இறைவன் புறமிருந்து வந்திருப்பதாக வாதம் செய்துள்ளனர். அதற்கான ஆதாரங்களை எடுத்து வைத்தார்கள். இறைவனுடைய உதவிகள் அன்னார் உண்மையாளர் என்று சாட்சி பகர்கின்றன. இப்போது இம்மக்கள் சிந்திக்க வேண்டும். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களை ஏற்றுக் கொண்டு, மூஃமின்களின் கூட்டத்தில் இணைந்து கொள்ள வேண்டும்.

**ஸமிஃனா வதஃனா** (கேட்டோம்; கட்டுப்பட்டோம்) என்று சொல்பவர்களுடன் இணைய வேண்டும். இந்த செயல் பிறகு அவர்களை எங்கள் இறைவா உன்னிடம் நாங்கள் பாவமன்னிப்புத் தேடுகின்றோம் என்ற துஆவிற்கு சரியான உரிமையாளராக மாற்றும். கேட்டோம்; கட்டுப்பட்டோம் என்ற கட்டளையின்படி அமல் செய்தால்தான் அது சாத்தியமாகும். அல்லாஹ்வின் பக்கம் திரும்புவதன் மூலம் அல்லாஹ்வுடைய சொர்க்கத்திற்கு வாரிசாவீர்கள். இது அல்லாஹ்வுடைய வாக்குறுதியாகும். நமது முஸ்லிம் சகோதரர்களுக்கு இந்த உண்மையை விளங்கும் வாய்ப்பை அல்லாஹ் வழங்குவானாக.

அடுத்து சூரா பக்கராவின் கடைசி வசனத்தில் அல்லாஹ் இவ்வாறு தொடங்கியுள்ளான். லா யுகல்லிஃபுல்லாஹு நஃப்ஸன் இல்லா உஸ்அஹா. அல்லாஹ்வுடைய கட்டளைகள் மனித சக்திக்குட்பட்டவை. மனித சக்திக்கு அப்பாற்பட்ட கட்டளையை மனிதனுக்கு அல்லாஹ் இடுவதில்லை.

இந்த கட்டளையை நிறைவேற்றுவது ரொம்ப சிரமம் என்று மக்கள் கூறுகின்றனர். ஆனால் மனித சக்திக்கு அப்பாற்பட்ட எந்த கட்டளையும் இல்லை என்று இறைவன் கூறுகிறான்.

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:**

நமது எல்லா செயல்களிலும் நாம் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களைப் பின்பற்ற வேண்டும் என்றே நமக்கு கட்டளையிடப்பட்டுள்ளது.

ஆக, நமது இயல்பில் அந்த ஆற்றல் வைக்கப்படவில்லையெனில் முழுமையான முறையில் நாம் அவர்களை நிழலாகப் பின்பற்றுமாறு கட்டளை ஒருபோதும் வந்திருக்காது. அத்தகைய மாபெரும் நபியை பின்பற்றுங்கள். ஏனெனில் இறைவன் அதிகமான சுமையை ஒருபோதும் தருவதில்லை. ஏனெனில் அவனே கூறி விட்டான். **லாயுகல்லிஃபுல்லாஹு நஃப்ஸன் இல்லா உஸ்அஹா** – அல்லாஹ் ஒரு நஃப்ஸுக்கு அதன் சக்திக்கு மீறிய சுமையை சுமத்துவதில்லை.

எனவே, சூரா பக்கராவின் கடைசி வசனத்தை வெறுமே படித்தால் போதாது. முதல் வசனத்தில் ஈமான் கொள்ளுமாறு கட்டளை உள்ளது. ஈமான் உறுதியாகி விட்டால் பிறகு இறை கட்டளையில் சிலவற்றை ஏற்று சிலவற்றை மறுப்பது இயலாத காரியம். அல்லாஹ் கூறுகிறான். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் முன்மாதிரி உங்கள் முன் உள்ளது. எனவே ஈமானின் அதிகபட்ச எல்லையை தொடுவதற்கு எப்போதும் வழியைத் தேடிக் கொண்டிருங்கள். சில கட்டளையை நிறைவேற்றுவது நமது சக்திக்கு அப்பாற்பட்டது என்ற எண்ணம் ஒருபோதும் வரக்கூடாது.

அல்லாஹ்வின் கட்டளைகளில் மனிதனால் இயலாத கட்டளை இது என்று எதனையும் காட்ட முடியாது. மனிதன் மார்க்க விஷயத்தில் மிகவும் சொகுசையும் எளிதையும் விரும்பவில்லையெனில் அவனுக்கு சுமையாக அழுத்தும் எந்த கட்டளையும் இல்லை.

உலக வேலைகளுக்காக மனிதன் எவ்வளவோ முயற்சி செய்கிறான். மார்க்க விஷயத்தில் ஏன் அந்த முயற்சி செய்ய முடியாது?

சூரா பக்கராவின் இந்த கடைசி துஆக்களை செய்வதால் மனிதன் மற்ற கட்டளைகளை நிறைவேற்றுவதில் இருந்து ஒருபோதும் விடுதலை பெற்று விடமாட்டான் என்று தெளிவாகி விட்டது. மாறாக, அதன் பொருளை அவர் சிந்தித்துப் படித்தால் அதன்படி அமல் செய்வார் என்பதாகும். **கியாமுல் லைல்** (இரவில் எழுந்து தொழுகையில் நிற்றல்) இருந்து மனிதன் தேவையற்றவனாக எப்படி ஆக முடியும்? ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அந்த அமலை நிறைவேற்றி நமக்கு முன்னுதாரணம் காட்டியுள்ளார்கள்.

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:**

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் முன்மாதிரி நாம் அப்படியே பின்பற்றி நடப்பதற்கேயாகும். மேலும் இதனை ஒருவர் கூர்ந்து படிப்பார் எனில், இரவில் இபாதத் செய்வதற்காக எழுவது ஒருவருக்கு சுமையாக இருக்காது என்றும் பொருள் கொள்ளலாம்.

**புகாரி ஹதீஸில் இவ்வாறு வருகிறது:**

ஒருவர் இரவில் சூரா பக்கராவின் கடைசி இரு வசனங்களை ஓதினால் அவை அவருக்கு போதுமானது.

ஈமானில் முன்னேற்றம், அல்லாஹ்வுடைய பாதுகாப்பில் வருதல் அவனது கருணையையும், மன்னிப்பையும் வேண்டுவதன் மூலம் இறைவன் அருள் புரிகின்றான். ஈமான் போதுமானதாகிறது. பிறகு இபாதத்துகள் நற்செயல்களின் பக்கம் கவனம் ஏற்படுகிறது.

அதுவன்றி வெறுமனே வசனங்களை ஓதுவது மட்டுமே போதுமானது என்று கருதுவது தவறு. ஏனெனில் மனிதன் சக்திக்கப்பாற்பட்ட சுமை சுமத்துவதில்லை என்று கூறிய பிறகு லஹாம கஸபத் வ அலைஹா மக்தஸபத் – அவ்வாறு நன்மை செய்தால் நன்மையை பெறுவார்; தீமை செய்தால் நஷ்டம் அடைவார் என்று கூறியுள்ளான். எனவே வெறுமனே வசனங்களை படிப்பதனால் மட்டும் நோக்கம் நிறைவேறாது. தமது இபாதத்துகள், நற்செயல்கள் மீது எப்போதும் கண்காணிப்பு இருக்க வேண்டும். இதன் பக்கம் கவனம் ஏற்பட்டால் இறைவனது கருணையின் பார்வை அவன் மீது இருக்கும். அல்லாஹ்வின்

அடியாரின் ஈமானின் முன்னேற்றம் அவனது கருணையை மன்னிப்பை அருகில் கொண்டு வருகிறது. அதுவன்றி கிறித்தவர்கள் கூறுவது போல அதற்காக எவரையும் கேடயமாக பலியிட வேண்டியதில்லை. எனவே தினமும் இந்த வசனங்களை படிப்பதால் நற்செயல்களை அதிகமாக்குவதில் கவனம் ஏற்படும்.

ஒரு மூஃமின், என்னென்ன நன்மைகளை நாம் செய்தோம்; என்னென்ன தீமைகளை செய்தோம் என்று ஆய்வு செய்வார். இதனால் மென்மேலும் நன்மைகள் அதிகரிக்கின்றன.

இறைவனுக்கு பயந்து பயந்து நாளை கழித்ததாக மாலை சாட்சி பகரும் எனில், நன்றி செலுத்தும் முகமாக அல்லாஹ்வுக்கு முன் ஒரு மூஃமின் இரவில் இன்னும் அதிகமாக குனிவார். ஒரு மூஃமின் தனக்கு கிடைத்த வாய்ப்புகளைப் பற்றி ஆய்வு செய்யும் போது இறைவனிடம் இவ்வாறு கூறுவார். என் இறைவா! நான் என்னைப் பற்றி செய்த ஆய்வுடன் வெறும் நஃப்ஸின் ஏமாற்றம் எனில் என் மீது கருணை காட்டி மன்னித்து விட்டு, பிறகும் கருணை காட்டி மன்னித்து விடு. பிறகு நன்மை செய்ய வாய்ப்பளி. இன்னும் தெளிவான தீமைகள் அவரது ஆய்வில் தென்பட்டால் தாம் பகலில் தீமைகளைத்தான் செய்ததாகக் கண்டால் பிறகும் அல்லாஹ்விடம் மன்னிப்பும் கருணையும் கேட்டு ஒரு மூஃமின் குனிகின்றார். அந்த வசனத்தில் அடுத்த வார்த்தைகள் இவ்வாறு வருகின்றன. துஆவின் பக்கம் நம்மை சாய்க்கின்றன. எனவே, மனத் தூய்மையே இறைவனுக்கு அருகில் கொண்டு சேர்க்கின்றது. அடியான் துஆவின் மூலம் இறை நெருக்கத்தைப் பெறுகிறார். அந்த துஆவையும் இறைவனே கற்றுத் தந்துள்ளான். அதனை நல்ல எண்ணத்துடன் செய்தால், உள்ளத்திலிருந்து அந்த துஆ வெளிப்பட்டால் அது ஏற்புடைமையின் தகுதியைப் பெறுகிறது.

முதல் துஆ **ரப்பனா லா துஆகிஸ்னா இன்ன ஸீனா அவ்அக்தஃனா** – அல்லாஹ்வே எம்மிடம் ஏதும் மறதி ஏற்பட்டால், தவறு ஏற்பட்டால் தண்டித்து விடாதே.

ஒரு மூஃமின் இதனைக் கேட்கிறார். நாங்கள் எமது ஈமானில் முன்னேற்றம் பெறுவதற்கு எப்போதும் முயற்சி செய்து வருவோம். எமது இபாதத்துகளின் தகுதியை உயர்த்துவதற்கு முயற்சி செய்து வருவோம். எல்லா கட்டளைகளின்படியும் அமல் செய்ய முயற்சி செய்து வருவோம். அடியாருக்குள்ள உரிமையை நிறைவேற்ற எப்போதும் முயல்வோம். ஆனால் பிறகும்கூட மனிதன் என்ற முறையில் எமது விருப்பமில்லாமல் கூட அல்லது சோம்பலின் காரணமாக இந்த எல்லா கட்டளைகளின்படியும் அமல் செய்ய மறந்து விட்டால் அல்லது இந்த பணிகளைச் செய்யும் வேளையில் அதில் தவறுகள் நேர்ந்து விட்டால், அந்த நற்செயலில் ஷய்த்தான் நுழைந்து விட்டால் அந்த நற்செயலே எவருக்கும் கஷ்டம் உண்டாக காரணமாகி விட்டால் என்னை அதற்காக பிடித்து விடாதே. ஏனெனில் ஒருவருக்கு ஸதகா கொடுத்தால், கொடுத்ததை சுட்டிக்காட்டி அவருக்கு தொல்லை தரக்கூடாது என்று இறைவன் கூறியுள்ளான். அவ்வாறு சொல்லிக்காட்டி துன்புறுத்துவதை இறைவன் விரும்பவில்லை. எனவே, துஆவுடன் அவனிடம் இவ்வாறு மன்னப்பு கேட்கிறார். என் இறைவா! அப்படி ஏதாவது எனது நன்மையில் இதுபோன்ற குறைபாடு நேர்ந்து விட்டால் என்னை பிடித்து விடாதே. மாறாக, எம்மை உனது கருணை மற்றும் அருளால் நேரான வழியில் நடத்துவாயாக. எனது எந்த அமலும் உனது திருப்திக்கு மாற்றமானதாக இருக்கக் கூடாது.

பிறகு வருகிறது: **ரப்பனா வலா தஹ்மில் அலைனா இஸ்ரன் கமா ஹமல்தஹு அலல்லஸீன மின் கப்லினா** – என் இறைவா! எமக்கு முன் இருந்தவர் மீது சுமத்தியது போன்று சுமைகளை எம்மீது சுமத்தி விடாதே. உனது திருப்திக்கு மாற்றமான செயல் எம்மிடமிருந்து வெளிப்படக் கூடாது. நாங்கள் எப்போது உனது கட்டளைகளை அமல் செய்பவர்களாக இருக்க வேண்டும். எமக்கு முன் இருந்தவர்களைப் போன்று நாங்கள் ஆகி விடக்கூடாது. அவர்கள் உனது கட்டளைகளை விட்டு உனது கோபத்திற்கு ஆளாகினர். நாங்கள் ஒவ்வொரு செயல் செய்வதற்கும் உனது உதவியை தேடுகிறோம். எமது தீய செயல்கள எம்மை ஒருபோதும் உன்னை விட்டு தூர விலக்கவிட வேண்டாம். நாம் ஒருபோதும் உனது கட்டளைகளை நிறைவேற்றாதவர்களாகி விடக் கூடாது. ஏனெனில் மனித சக்திக்கு அப்பாற்பட்ட சுமையை மனிதன் மீது

அல்லாஹ் ஒருபோதும் சுமத்துவதில்லை. எனவே, மனித பலவீனமே அவனை நன்மையிலிருந்து விலக்கி விடுகிறது.

எனவே, இறைவன் இவ்வாறு துஆ செய்யுமாறு கூறுகிறான். நாங்கள் உன்னிடம் செய்த உடன்படிக்கைகளை முன்னிருந்தவர்கள் முறித்து உனது தண்டனையை எதிர்கொள்ள வேண்டி வந்தது போன்று நாங்கள் முறித்து விடக்கூடாது. இஸ்ரன் என்ற சொல்லுக்கு இது அல்லாமல் இன்னும் பல பொருட்களும் உள்ளன. மிகவும் கடினமான உடன்படிக்கை, பெரும் பொறுப்பு நிறைவேற்றாவிட்டால் தண்டனையைப் பெற்றுத் தரும் பொறுப்பு பாவம் என்று பொருள்படும். இஸ்ர் என்பதற்கு உடன்படிக்கை என்ற பொருள் இருந்ததால் அதன் அடிப்படையில் நான் இவற்றை கூறினேன்.

இந்த அடிப்படையில் ஒரு மூஃமின் துஆ கேட்கிறார். முன்னிருந்தவர்கள் தமது கடமையை செய்யாமல் விட்டு, உடன்படிக்கையை முறித்து, கட்டளைகளை நிறைவேற்றாமல் உனது தண்டனைக்கு காரணமாயினர். என் இறைவா! நீ அத்தகைய செயலிலிருந்து எம்மை காப்பாற்றுவாயாக.

பிறகு கூறினான். **ரப்பனா வலா துஹம்மில்னா மாலா தாக்கத்லனா** – அல்லாஹ்வே எமது சக்திக்கு அப்பாற்பட்ட சுமையை எங்கள்மீது சுமத்தாதிருப்பாயாக. சில நேரங்களில் அல்லாஹ் உலக சோதனைகளைக் கொண்டும் தனது அடியார்களை சோதிக்கின்றான் அல்லாஹ் எல்லாவகையான உலகியல் துன்பங்களிலிருந்து பாதுகாப்பனாக. நமது சக்திக்கு அப்பாற்பட்ட சோதனைகளிலிருந்து பாதுகாப்பானாக.

ஆன்மீக சோதனை மற்றும் பௌதீக சோதனையிலிருந்து தப்பிப்பதற்காக எப்போதும் துஆ செய்ய வேண்டும். நிலைமைகள் நன்றாக இருந்தால் அல்லாஹ்வின் நினைவே இல்லாமல் ஆகிவிடக் கூடாது.

சில நேரங்களில் அல்லாஹ் உலகியல்ரீதியாகவும் சோதிக்கிறான். எனவே ஒரு மூஃமின் எப்போதும் இந்த துஆவை செய்து கொண்டிருக்கிறார். எனக்கு வரும் சோதனை எவ்வகையிலும் எனது சக்திக்கு அப்பாற்பட்டதாக இருந்து விட வேண்டாம். சில வேளைகளில் உலகியல் சோதனைகளால் ஆன்மீக வாழ்வுக்கும் சோதனை வந்து விடுகிறது. உலக சோதனைகள் ஆன்மீக சோதனைக்கு காரணமாகி விடுகின்றன. அல்லாஹ்வே நீ உலகியல் சோதனையைத் தந்தால் அதனை தாங்குவதற்கான சக்தியையும் தந்து விடு.

பல வழிகளில் சோதிக்கிறான். குழந்தைகள் மூலமாகவும், பொருளாதார ரீதியாகவும் சோதிக்கின்றான். எல்லா நிலையிலும் இறைவனது அடைக்கலத்தை ஒரு மூஃமின் வேண்டிக் கொண்டிருக்க வேண்டும். ஒவ்வொரு சோதனையிலிருந்தும் தப்பிப்பதற்காக இறைவன் துஆ கற்றுத் தந்துள்ளான்.

நாங்கள் விரும்பியோ விரும்பாமலோ செய்ய வேண்டிய ஒரு பணியை செய்யாமல் விட்டு விட்டால் அதனால் சோதனைகள் வந்தால் என் இறைவா உன்னிடம் உருகி மன்றாடுகிறோம். நீ அவற்றை திரையிட்டு மன்னித்து அதன் தீய விளைவுகளிலிருந்து காப்பாற்றுவாயாக.

பிறகு துஆ செய்யுங்கள். **வஃஃபிர்லனா** – எம்மை மன்னிப்பாயாக. **கஃபர்** என்பதற்கு மூடுதல், ஒன்றை சீர் செய்தல், அழித்தல் என்று பொருள்படும்.

என் இறைவா உன் பார்வையில் தவறாக தெரியக்கூடிய ஒரு வேலையை ஒரு தவறை நாங்கள் செய்திருந்தால் அதன் தீய விளைவை அழித்து விடுவாயாக. அதனை முடித்து விடுவாயாக. வருங்காலத்தில் எம்மை சீர்படுத்தி எப்போதும் நல்லவற்றை சாய்ந்து நிற்க வாய்ப்பு தருவாயாக. எமது தவறுகள் உனது கோபத்தை தூண்டி விடாமல் நீ காப்பாயாக.

பிறகு துஆ செய்யுங்கள். **வர்ஹம்னா** – எம்முடன் கருணையுடனும் மென்மையுடனும் நடந்து கொள்வாயாக. உனது கருணையால் மட்டும் எமது தவறுகளை மன்னிப்பாயாக. மன்னித்தால் மட்டும் போதாது. மன்னித்தலின் அசல் நோக்கமாகிய வருங்காலத்தில் அவை நேராமல் திருப்திக்குரிய செயல்கள்

மட்டும் எம்மிடமிருந்து வெளிப்படட்டுமாக. அதன் மூலம் நாங்கள் உனது அன்புப் பார்வை பட்டவர்களுடன் எப்போதும் இருக்கும் வாய்ப்பு கிடைக்கட்டுமாக. இந்த தவறுகளின் காரணத்தால் எமது வளர்ச்சி ஒருபோதும் குறைபடவும் வேண்டாம். தடைபட்டு விடவும் வேண்டாம்.

பிறகு துஆ செய்யுங்கள். **அன்த மவ்லானா** – நீ தான் எஜமானன். உன்னைத் தவிர வேறு யாரும் இல்லை. எமது குறைகளை திரையிடுவாயாக. எம்மை மன்னித்து விடுவாயாக. எம்முடன் கருணையுடன் நடந்து கொள்வாயாக என்று கேட்கும் போது அளவற்றை முறையில் அடியானின் மீது இறைவனது **அஃபூ** – குறைகளை கண்டும் காணாமல், **மக்ஃபிரத்** – மன்னித்தல், **ரஹ்மத்** – கருணை இறங்குகிறது. எமது தனிப்பட்ட பலவீனம் ஜமாஅத்தின் மீது தீய தாக்கத்தை ஏற்படுத்தி விட வேண்டாம். சில வேளை தனிப்பட்ட சிலரது குறைபாடுகளின் காரணத்தால் ஜமாஅத்தின் மீது விரலை உயர்த்துகின்றனர் (ஆட்சேபனை செய்கின்றனர்). சிலவேளை பொறுப்பாளர்களின் பலவீனம் மக்களுக்கு ஜமாஅத்தின் மீது விரலை உயர்த்த வாய்ப்பை தந்து விடுகிறது. நாங்கள் இறைவனது ஜமாஅத் என்று வாதம் செய்கிறோம். உலகம் நமது பலவீனத்தின் காரணத்தால் விரலை உயர்த்தும் போது நமது தீய செயலின் காரணத்தால் நமக்கு இறைவன் தண்டனை தந்திருப்பதாக உலகம் கூறும்.

பிறகு இதனால் இறைசெய்தியை உலகில் எடுத்து வைப்பதில் தடை ஏற்படும். உனது தூதுச் செய்தியை உலகில் எடுத்தும் வைக்கும் எமது பொறுப்பு தடைபட்டு விடும். எனவே எமது எஜமானனே எம்மீது கடுமை காட்டி விடாதே. எமது தவறுகளை சீர்திருத்துவாயாக. எம்மை நேரான வழியில் நடத்துவாயாக.

**ஃபன்சுர்னா அலல் கவ்மில் காஃபிரீன்** – காஃபிர்களுக்கு எதிரில் எமக்கு எப்போதும் உதவி செய்து கொண்டிருப்பாயாக. அவர்களை வெற்றி பெறச் செய்வாயாக. நாங்கள் பலவீனமானவர்கள்தான். உனது அருள், சிறப்பான கருணை மூலம் எமக்கு வெற்றி கிடைக்க வேண்டும். எனவே எம்மை தனிப்பட்ட முறையிலும் சரி, ஜமாஅத் அளவிலும் சரி உனது சிறப்பான அருளுக்கு காரணமாக இருப்பவர்களுடன் எம்மை இணைத்து வைப்பாயாக. எமக்கு மற்றவர்களை விட்டும் தனிச்சிறப்பை ஏற்படுத்துவாயாக. எந்த நோக்கத்திற்காக ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊது (அலை) அவர்களை ஏற்றுக்கொண்டோமோ அதனை பெறச் செய்வாயாக.

இந்த பொருளில் இந்த சிந்தனையோடு நாம் துஆ செய்வோம் எனில் இந்த சூரா பக்கராவின் கடைசி துஆவை ஓதுவோம் எனில் நமது கிப்லா சரியான திசையில் இருக்கும். நாம் இந்த வசனத்தின் பரக்கத்துகளிலிருந்து பயன் பெறுவோம். அதுவன்றி வெறும் வார்த்தைகளை மட்டும் படிப்பது பயன் தராது. அவை போதுமானதன்று. திருக்குர்ஆன் வசனங்களை ஓதுவதும் பரக்கத்துதான் என்பது கண்டிப்பானதாகும். எனினும் அந்த பரக்கத் நல்ல உள்ளத்திற்கே கிடைக்கிறது. உள்ளத்தில் நன்மை இல்லையெனில் சில தொழுகையாளிகளின் தொழுகைகள் அவர்களது முகத்தில் வீசப்படுவது போன்று, இவ்வார்த்தைகளை வெறுமே படிப்பவர்களை பொய்ப்படுத்தி அவர்களிடமே திருப்பித் தரப்படுகிறது. இந்த வசனம் மனிதனுக்கு போதுமானதாக இருப்பதற்கு காரணமே அவனது முழுமையான ஆய்வு இதில் வந்து விட்டது என்பதால்தான். நான் ஏற்கனவே கூறியது போன்று நற்செயல்கள் செய்வதன் பக்கம் கவனம், துஆ இதுதான் அவனுக்கு போதுமானதாக இருக்கிறது. ஓர் அடியார் இவ்வாறு முயற்சி செய்வார் எனில் எனக்கு முழுக்க முழுக்க அல்லாஹ்வே போதுமானவன் என்று அவர் செயல்ரீதியாக வெளிப்படுத்துகிறார்.

அத்தகைய மனிதருக்கு ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் உத்தரவாதம் அளித்துள்ளார்கள். இந்த வசனத்தை இறக்கியவன் அந்த அடியாருக்கு போதுமானவனாகி விடுகிறான். அவனை தீமையிலிருந்து பாதுகாக்கிறான். அவனிடம் ஒரு தன்னிறைவை உருவாக்குகிறான். அவனது துக்கங்களுக்கு ஆறுதல் வழங்குகிறான். அவனை ஷய்த்தானிடமிருந்து பாதுகாக்கிறான்.

அல்லாஹ் நம்மை உண்மையான பொருளில் இந்த வசனங்களை புரிந்து கொண்டு அதன்படி செயல்பட தவ்ஃபீக் தருவானாக.

இந்த பண்பு தொடர்பாக திருக்குர்ஆனின் பிற வசனங்களையும் விளக்க வேண்டும் என்று கருதினேன். ஆனால் பிறகு வருங்காலங்களில் விளக்குவேன். இப்போது நான் ஒரு துஆவின் பக்கம் கவனமூட்ட விரும்புகிறேன். கடந்த இரு குத்பாக்களில் நான் கவனமூட்டியதுபோன்று பாலஸ்தீனியர்களுக்காக துஆ செய்யுமாறு கேட்டுக் கொள்கிறேன். அவர்களின் நிலை மிகவும் மோசமாகிக் கொண்டே செல்கிறது.

உண்மையில் அவர்கள் அநீதியின் செக்கில் இட்டு ஆட்டப்பட்டுக் கெண்டிருக்கின்றனர். இஸ்ரேலியர்களின் அநீதி அதிகமாகிக் கொண்டே செல்கிறது. இப்போது இஸ்ரேலுக்குள் இருந்தவர்களே பலர் (விளக்கின்) திரியாக செயல்படுகின்றனர். பிரச்சனையைத் தூண்டுகின்றனர். ஆனால் உண்மை நிலையைப் பற்றி பலருக்கு உணர்வு ஏற்பட்டுள்ளது. எவ்வாறிருப்பினும் இப்போது கூச்சலிடுகின்றனர். முதலில் அமைதியாக இருந்தவர்களும் இவர்களே. ஆரம்பத்திலேயே நீதியுடன் முடிவெடுத்திருந்தால் இந்நிலை ஏற்பட்டிருக்காது. அமைதியாக இருக்கின்ற இந்த நாடுகள் உண்மையில் அநீதிக்கு தூண்டுகின்றன. இன்னும் சொல்லப்போனால் அநீதிக்கு காற்று ஊதி பெரிதாக்குவதற்கு சமமானது இவர்களின் அமைதி.

அப்பாவி குழந்தைகள் வயோதியர்கள், பெண்கள் ஷஹீதாக்கப்படுகின்றனர். அவர்களுக்கு கருணை காட்டுமாறும் துஆ கேளுங்கள். அதன் மூலமே இப்போது நாம் அவர்களுக்கு உதவி செய்ய இயலும். மேலும் பல அமைப்புகளும், மருந்துகளும் உணவுகளும் அனுப்புகின்றன. அதன் மூலம் நோயாளிகளுக்கும் பசித்தவர்களுக்கும் உதவி செய்கின்றனர்.

சரியான முறையில் தேவையான அளவு உதவி கிடைக்கவில்லை. எனினும், இந்த வழிமுறைகள் மூலம் கூட எவ்வளவு முடியுமோ அவ்வளவு உதவிகள் செய்யலாம். Humanity First மூலம் ஜமாஅத்தின் தரப்பிலிருந்தும் உதவி செய்ய வேண்டும். முடிந்தவர்கள் உதவி செய்ய வேண்டும். முதலில் அப்பாவி மக்கள் மீது இறைவன் கருணை காட்டவும் அநீதியிழைப்பவர்களை பிடிக்கவும் இறைவன் உதவி செய்வானாக. அதற்காக துஆ செய்ய வேண்டும்.

★ ★ ★ ★ ★

**JUMUA KUTHBA**
**HADHRAT KHALIFATUL MASIH V**
**AT BAITUL FUTUH MOSQUE, LONDON**
**ON 16.01.2009**

Translated by : **Muallim M. NIZAMUDEEN Sb.**
Published by : **MAJLIS KHUDDAMUL AHMADIYYA**
ASHURA EAST STREET, MELAPALAYAM,
TIRUNELVELI – 627 005.
**TELEFAX : 0462 - 2352456**